**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**மூன்றாம் வருட / முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு– 2017/2018 செப்டெம்பர்/ஒக்டோபர் ~ 2020)**

# CH 3122 – The Place of the Church and the Sacraments in Christian Life

**நேரம் : 02மணித்தியாலங்கள்**

**இவ்வினாப்பத்திரம் பகுதி I, பகுதி II என இரு பகுதிகளைக் கொண்டது.**

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தலா இரு வினாக்களைத் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

---

## பகுதி - I

1. I. யூத சமயச் சடங்குகள் குறித்த இயேசுவின் பார்வை யாது? (10 புள்ளிகள்)
   II. புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்ற அருளடையாளக் குறிப்புக்களை விவிலிய உதாரணங்களுடன் தருக. (10 புள்ளிகள்)

2. I. 'அருளடையாளம்', 'மறைபொருள்' போன்ற சொற்பதங்களை வரையறை செய்க. (10 புள்ளிகள்)
   II. 'திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவம் ஆகிய அருளடையாளங்கள் மீளவும் வழங்கப்படக்கூடாது' என்பதன் மட்டிலான புனித அகுஸ்தீனாரின் போதனை யாது? (10 புள்ளிகள்)

3. I. புனித தோமஸ் அக்குவினாசின் அருளடையாளங்கள் குறித்த இறையியல் போதனை யாது? (10 புள்ளிகள்)
   II. சீர்திருத்தவாதியாகிய மார்ட்டின் லூத்தரின் அருளடையாளங்கள் குறித்த புதிய போதனை யாது? (10 புள்ளிகள்)

## பகுதி–II

4. இறையியலாளர்களான ஓடோ காசல், எட்வர்ட் ஸ்கிலெபெக்சு, கார்ல் ரானர் ஆகியோரின் அருளடையாள இறையியலினைக் குறிப்பிட்டு அவை எவ்வகையில் புதிய பொருள் செறிந்த அருளடையாள இறையியலுக்கு வித்திட்டது என்பதனை ஆராய்க. (30 புள்ளிகள்)

5. நற்கருணை இறையியல் குறித்த சீர்திருத்த இறையியலாளர்கள் முன்வைத்துள்ள கருத்துக்களில் அமைந்துள்ள ஒற்றுமையினையும் வேறுபாட்டினையும் எடுத்துரைத்து அவை எவ்வகையில் கத்தோலிக்க திருஅவையின் நற்கருணைப் போதனையிலிருந்து வேறுபடுகின்றன என்பதனை விளக்குக (30 புள்ளிகள்)

6. 'அடித்தளத்திலிருந்து புறப்படுகின்ற திருஅவையே இன்றைய காலத்தின் தேவையாகும்' அடித்தளத் திருஅவையின் இறையியலை விளக்கி அது எவ்வகையில் இன்றைய காலத் திருஅவைக்கு பொருத்தமானதாகும் என்பதனை விளக்குக. (30 புள்ளிகள்)